ருக்கின்றன, அவையெல்லாம் ஏப்ரல் முதல் தேதிக்குக் காலாவதியாகின்றன. அதை நிரந்தரமாக்கி கொடுக்க ஏதாவது குறிப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படிக் கொடுக்கும் நேரத்தில், பஸ் முதலாளிகளில் சிறிய பஸ் முதலாளிகளும், பெரிய பஸ் முதலாளிகளும் இருப்பதால், அவர்களுடைய கோரிக்கைகளை விசாரிக்கும்போது, சிறிய ஆபரேட்டர்களுக்கு முதல் ப்ரஃபரன்ஸ் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்வியின் நோக்கத்தை செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுதாபத்தோடு கவனிப்பார் என்று எண்ணுகின்றேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : 1959-ஆம் ஆண்டில், மதுரை நகர ஜனத்தொகைப் பெருக்கத்திற்கேற்றவாறு, நகர பஸ்கள் போதுமான அளவுக்கு இல்லை என்று விசேஷ அதிகாரி நியமிக்கப்பட்டு, இப்பொழுது உள்ளதைவிட இரண்டு மடங்கு பஸ்கள் விடவேண்டும் என்று அன்றைக்கே ஒரு ரிப்போர்ட் அளிக்கப்பட்டதே, அதை காங்கிரஸ் சர்க்கார்தான் நிறைவேற்றவில்லையென்றாலும் இன்றைக்கிருக்கும் சர்க்காராவது நிறைவேற்றியுள்ளதா? அல்லது இனிமேலாவது நிறைவேற்ற உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மதுரை நகரத்தில் இன்னும் அதிகமான பஸ்கள் விடப்படவேண்டும் என்று ரீஜினல் ட்ரான்ஸ்போர்ட் அதிகாரி மதுரை நகரத்திற்கென்று ஓர் அறிக்கையை பழைய அரசாங்கம் இருக்கும்போது தந்தது உண்மை. அதைத் தொடர்ந்து, 12 ரூட்களை மதுரை நகரத்தில் புதிதாகத் திறக்கலாம் என்று போர்டு மெம்பரும் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்தார். ஆனால், பழைய அரசாங்கம் அதைக் கவனிக்காமல் இருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சிகரமான ஒரு செய்தியை இப்பொழுது நான் சொல்ல முடியும். கடந்த வாரம்தான், அந்த 12 ரூட்களுக்கு பர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : இந்தப் புதிய வழித்தடங்களுக்கு அனுமதி கொடுக்கும்போது, தகப்பன், பிள்ளை, மனைவி என்று இப்படி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பல பேர்களுக்கு கொடுத்துவிடுகிறார்கள். அப்படி அவர்களுக்கு அனுமதி கொடுக்கும்போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்தானா என்று பரிசீலனை செய்து பார்த்து, ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவராக இல்லாமல் தனிப்பட்டவர்களாக இருப்பவர்களுக்கு அனுமதி கொடுக்க அரசு தீவிர முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இன்றையதினம் அஸ்ஸாம் மாநிலத்திலே கூட அப்படிப்பட்ட தவறுதல் நடைபெறுவதாகவும், அது உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களுக்கு ஏற்ற தண்டனை வழங்குவதாகவும் கூட, அஸ்ஸாம் மாநில அமைச்சர் பேசிக் கொண்டிருந்தபோது என்னிடம் குறிப்பிட்டார். அதைப்போல் இங்கு இப்பொழுது செய்யாவிட்டாலும், கூடுமானவரையில் மாவட்டத்தினுடைய ஆட்சித்தலைவர்கள் அவைகளை எல்லாம் கவனித்து, அதைத் தவிர்த்துக் கொண்டு வருகிறார்கள் என்று அறிகின்றேன்.

குடியாத்தம் வட்டத்திலுள்ள மோர்தானா அணை

*283 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூக்காவில் மோர்தானாடாம் கட்டும் விஷயமாக மீண்டும் நடவடிக்கை எடுக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) அங்கத்தினரின் இவ்வாலோசனை அரசினரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதேபோன்று, வடாற்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல், மாநிலத்தில் எங்கெல்லாம் சிறிய சிறிய அணைகளைக் கட்ட முடியுமோ அங்கெல்லாம் கட்டுவதன் மூலமாக, எதிர் காலத்தில் விவசாய அபிவிருத்தியும் உணவு உற்பத்திப் பெருக்கமும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்குமே, அந்த முறையில் சிறிய சிறிய அணைகளை கட்டக்கூடிய சாத்தியம் உள்ள எல்லா இடங்களிலும் கட்டுவதற்கு தீவிரமான முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினரைப் போலவே அரசுக்கும் அந்த ஆசை இருக்கிறது. ஆனால், பாத்திரத்திலேதான் பண்டம் குறைவாக இருக்கிறது.

Bridges

*284 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the shaky condition of the bridge in the Nagercoil-Manavalakurichi road near Kannakurichi ;

(*b*) whether the Government have received memoranda from the public of Kannakurichi about the deplorable condition of this bridge ; and

(*c*) if so, when the work of reconstruction will be started ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) கண்ணக்குறிச்சி அருகில் நாகர் கோயில்-ராஜக்கமங்கலம் கொளச்சல் சாலையில் 7/6 மைலில் உள்ள கட்டுமான அமைப்பு ஒரு மதகாகும். அது பாலமன்று. அது நன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) மழைக்காலத்தில் இதன் கரையிலுள்ள அணுகுவழிகள் அரிக்கப்பட்டன ; பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கோரி தல வட்டாரப் பொறியாளருக்கு முறையீடுகள் வந்துள்ளன.

(உ) மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டும் தழைச் செடிகள் வளர்ப்பதன் மூலமும் அணுகுவழிகள் தற்போதைக்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. ரூ. 4,700 மதிப்பீட்டுச் செலவில் தகுந்த தடுப்புச் சுவரும் பற்றுச் சுவரும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதகைப் புதுப்பிப்பதற்கு உடனடியான தேவை இல்லை.

திரு. ஏ. முனியாண்டி : பேரணையிலே கட்டப்பட்ட பாலம் போக்கு வரத்துக்கு வசதியற்றதாக இருப்பதால், அதை போக்குவரத்துக்கு வசதியாகக் கட்ட அரசுக்கு யோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொடக்கக் கேள்வி கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தது.

*285 வினா.—திரு. இல. பலராமன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆரணி தாலுக்காவில் குன்னத்தூர் to அய்யம்பாளையம் நெடுஞ்சாலையில் கீழ்நகர் அருகாமையில் நாகநதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?